ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 18—8—46 | இதழ் 16



என். கிருஷ்ணராஜு



ப. கண்ணன்

காமிராவுக்குத் தப்பிய காட்சிகள்:

## வழக்கு வாபஸ்!

★

இடம்:— ஒரு (நீதிபதியின்) கோர்ட் மண்டபம்.

பாத்திரங்கள்:—

நீதிபதி
வாதி வக்கீல்
சிவநேசன், குற்றவாளி.
மாணிக்கம் செட்டியார், வழக்குத் தொடுத்தவர்.
முத்துச்சாமி, ஒரு பூஜாரி, சாட்சி.
இருளாண்டி, மற்றோர் பூஜாரி, சாட்சி.
சேவகன்.
மேலும் பலவக்கீல்கள், ஊர் மக்கள் ஆகியோர்.

நிலைமை:—கோர்ட்டிலே, சிவநேசன் குற்றவாளி என்பதை நிரூபிக்க, வாதி மாணிக்கம் செட்டியாரின் வக்கீல், பலகூறிவிட்டுக் கடைசியாகச் சுருக்க முரைக்கிறார்.

●

வாதி வக்கீல்: 'இவன், மாணிக்கவாசகம் செட்டியார் மண்டிக்கடையில் குமாஸ்தா. இவனிடம், செட்டியாருக்கு அபாரமான நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கைக்குப்பாத்திரனை இவன், செட்டியார் கடையிலிருந்து பத்து வீசைக்கற்பூரத்தைக் களவாடிக்கொண்டு போய்விட்டான். இதுவே இவன் செய்த குற்றம்.

[கூண்டில் குற்றவாளி நிற்கிறான்.]

மாஜிஸ்: (குற்றவாளியைப் பார்த்து) உன் பெயர் என்ன?

குற்: சிவநேசன்.

மா: குற்றம் செய்திருப்பதை ஒப்புக்கொள்கிறாயா?

குற்: நான் ஒருகுற்றமும்செய்யவில்லையே.

மா: வழக்கின் விவரத்தை வக்கீல் கூறினாரே, கேட்டாயல்லவா?

குற்: கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்.

[வாதி வக்கீல்எழுந்துநின்று, தான், கேள்விகள் போடுவதாகக் குறிப்புக் காட்டிவிட்டு.]

வாதி வக்கீல்: இது கோர்ட் — நீதிமன்றம்.

குற்: நீதி கிடைக்குமென்று நம்பித்தான் நிற்கிறேன்.

வா. வ. வம்பளப்பு வேண்டாம். மண்டி மாணிக்கஞ் செட்டியார் கடையிலே நீ குமாஸ்தா தானே.

குற்: இருந்தேன்.

வா.வ: கடந்தவெள்ளிக்கிழமை என்ன நடந்தது?

குற்: தங்கள் வீட்டிலே பாட்டுக் கச்சேரி நடந்ததாகக் கேள்வி.

வா. வ: குறும்புபேசாதே. என் வீட்டு நடவடிக்கைபற்றி உன்னை யாரும் கேட்கவில்லை. செட்டியார் கடையிலே என்ன நடந்தது?

குற்: அதைக் கேட்கிறீர்களா? முன்னமேயே அப்படிக்கேட்டிருந்தால், நான் ஏன் தங்கள்வீட்டு விஷயம் பேசப்போகிறேன்.

வா. வ: சரி, சரி. கடந்த வெள்ளிக்கிழமைசெட்டியார்கடையிலே என்ன நடந்தது?

குற்: வியாபாரம்.

வா. வ: நான் சென்ஸ்! இது கோர்ட், இங்கேகோமாளிகளுக்கு இடம் கிடையாது.

குற்: நீதிபதி அவர்களே! வக்கீலய்யா கேட்கும் கேள்விக்குத் தானே நான் பதில் சொன்னேன். அவர் பிரமாதமாகக் கோபம் செய்து...............

மா: (வக்கீலைப் பார்த்து) come to the point.

வா.வ: Yes Your Worship. சிவநேசன்! சென்ற வெள்ளிக்கிழமை நீ செட்டியார் கடையிலிருந்து பத்து வீசை கற்பூரத்தைக் களவாடினாயா?

குற்: களவாடவில்லை. செட்டியார், அந்தப் பத்து வீசை கற்பூரத்தைக் கொடுத்து, எடுத்துக் கொண்டுபோய், மண்டி மாதவ முதலியாரிடம் கொடுத்துவிட்டு, பதிலுக்குக் கொள்ளுவாங்கிக் கொண்டுவரச் சொன்னார்.

வா. வ: விவரத்தைக் கூறுவதிலே நாணயமாகத்தான் இருக்கிறது. செட்டியார் சொன்னபடி கொடுத்தாயா?

குற்: இல்லை.

(வா. வ. உட்கார்ந்து கொள்கிறார்)

மா: உனக்கு வக்கீல் உண்டா?

குற்: இல்லை.

மா: என்ன சொல்கிறாய் இப்போது? பத்து வீசை கற்பூரத்தைத், செட்டியார் சொன்ன இடத்தில கொடுக்காததால், அதை நீ களவாடிக்கொண்டாய் என்று தானே அர்த்தம்.

(அடுத்த பக்கம் பார்க்க)



டி. என். ராமன்



என். வி. நடராஜன்



மு. செல்லப்பன்



கே. கரு

★

தோழர்கள்: என். கிருஷ்ணராஜு, மு. செல்லப்பன், கே. கருப்பண்ணன், ஆகிய மூவரும், கவிஞர் நிதி திரட்டும் பணியைத் துவக்கினர், தோழர்கள்: டி. என். ராமன்,



உறையூர்

**எஸ். எம். எஸ். ஆர். பி.**

சொந்தக்கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்தரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.


## வழக்கு வாபஸ்

1-ம் பக்கத் தொடர்ச்சி

குற்: தங்களைப்போன்ற பெரியவர்கள் தப்பர்த்தப்பட்டால் நான் என்ன செய்வது?

மா: வேஷம் போடாதே. கற்பூரத்தைக் கடையிலிருந்துஎடுத்துச் சென்றது உண்மைதானே.

குற்: ஆமாம்.

மா: கொடுக்கவேண்டிய இடத்திலே கொடுக்கவில்லை. அதுவும் உண்மைதானே.

குற்: ஆமாம்.

மா: வேறு என்ன ருஜுவேண்டும்,உன்னைத்தண்டிக்க? சரி,என்ன சமாதானம் சொல்கிறாய்?

குற்: இரண்டொரு சாட்சிகள் உள்ளனர், விசாரிக்க வேண்டுகிறேன்.

மா: யார்? பெயர்?

குற்: முதல் சாட்சி, மூலைக் கோயில் பூஜாரி முத்துச்சாமி.

(கோர்ட் சேவகன் முத்துச்சாமியைக்கூப்பிடுகிறான்.)

மா: பெயர்?

முத்: பூஜாரி முத்தன்.

குற்: அப்பா முத்து! போன வெள்ளிக்கிழமை சாயரட்சை, நான் கோயிலுக்கு வந்தேனா?

முத்: வந்திங்க.

குற்: வந்து..............?

முத்: பிள்ளையாரைக் கும்பிட்டிங்க.

குற்: வேறே என்ன விசேஷம் நடந்தது?

முத்: ஒரே அடியா பத்துவீசைக் கற்பூரத்தைக் கொளுத்தினிங்க.

குற்: அவ்வளவுதான் அப்பா. (முத்து போகிறான்; வா. வ. அவனை நிறுத்தி)

வா. வ: பத்து வீசைக் கற்பூரத்தை இந்த ஆசாமி கொளுத்தினாரா?

முத்: இல்லிங்க, அவர் கொடுத்தாரு நான் கொளுத்தினேன்.

வா. வ: அது திருட்டுச் சொத்துன்னு உனக்குத் தெரியுமா?

... எனக்கெப்படித் தெரி... கோயிலுக்கு வருகிற ...ண்டுவருகிறகாணிக்கை ..., திருட்டுச் சொத் ...ப்படித் தெரி

இவனை?

...பாவ

பூ: பாவம் புண்யம்இதெல்லாம் இங்கே கூடாதுங்களா? எனக்குத் தெரியாதுங்கோ.

(பூஜாரி போகிறான்)

குற்: இரண்டாவது சாட்சி, இருளாண்டி.

(கோர்ட்சேவகன் இருளாண்டியைக் கூப்பிடுகிறான்)
(இருளாண்டி வருகிறான்)

குற்: அப்பா இருளாண்டி! போன வெள்ளிக்கிழமை, ஆலமரத்தடி சாமியார் உபதேசம் செய்தாரே, நீ இருந்து கேட்டதுண்டா?

இரு: இருந்தேனுங்க. நீங்களும் வந்திருந்திங்களே.

குற்: என்னைப்பார்த்து அவர் என்னப்பா சொன்னார்?

இரு: அடே அஞ்ஞானி! ஏன் இன்னமும் சேவையிலோடுபடாம லிருக்கிறாய்? மூலைக் கோயிலானை வணங்கு. அவனுக்குச் சகலத்தையும் சமர்ப்பித்துவிடு, என்று சொன்னார்.

குற்: நான் என்ன செய்தேன்?

இரு: மயக்கம்வந்தமாதிரி ஆயிட்டிங்க, விழுந்து விழுந்து கும்பிட்டிங்க.

குற்: பிறகு,

இரு: சாமியார் விபூதி கொடுத்தாரு பூசிகிட்டிங்க.

குற்: அதற்குப்பிறகு?

இரு: கூடையைத் தூக்கிகிட்டு ஓடினிங்க.

குற்: ஓடி........................?

இரு: நானும் பின்னாலேயே ஓடி வந்தேன். நேரே மூலைக் கோயில் போய், கூடையிலே இருந்த கற்பூரத்தைக் கொளுத்தினிங்க. பக்தர்களெல்லாம், விழுந்து கும்பிட்டாங்க.

குற்: அவ்வளவுதான் அப்பா.

(இருளாண்டி போகிறான்)

குற்: செட்டியாரும் ஒரு சாட்சிங்க.

(செட்டியார் வருகிறார்)

குற்: செட்டியாரே! வியாழக்கிழமை தங்கள் வீட்டிலே, காலட்சேபம் நடந்துதுங்களா?

சே: ஆமாம்!

குற்: என்னகதை நடந்ததுங்க?

சே: பக்த ராமதாஸ்.

குற்: கதை முடிஞ்சபிறகு,நீங்க என்கிட்ட என்னசொன்னிங்க?

சே: ராமதாசுடைய பக்தியே பக்தின்னு பேசினேன்.

குற்: அவரைப்போல நாமெல்லாம் பக்திமான்களா இருக்கணும்னுகூடச் சொன்னிங்களே.

சே: ஆமாம் சொன்னேன்.

குற்: அப்ப, பாகவதர் என்ன சொன்னாருங்க?

சே: என்னமோ சொன்னார்.

குற்: பரவாயில்லை சொல்லுங்க. செட்டியாரே, உங்களுக்கு ஒப்பற்றஒருநாயனார்பெயர்இருக்கிறது மாணிக்கவாசகரும் மகா பக்திமானென்று சொல்லலே.?

சே: சொன்னான், அந்தக்கதையைச்சொல்லச் சொல்லி ஒருநாள் கூப்பிடுவேன் என்ற நினைப்பிலே.

குற்: கதைச் சுருக்கங் கூடச் சொன்னாரே.

செ; ஆமாம், சாம்பிள் காட்டினான்.

குற்: அவ்வளவுதானுங்க.

(அவரும் போகிறார்)

மா: சாட்சிகள் கூறினதாலே, என்ன சாதகம் உனக்கு?

குற்: சாதகம், உண்டோ இல்லையோ இந்தச் சாட்சிகள் சொன்னவை உண்மை.

மா: ஆமாம், அதனாலே?

குற்: நான் கள்ளனல்ல, பக்தன் என்று ஏற்பட்டிருக்கவேண்டுமே! பக்திக்குக்கூடத் தண்டனை உண்டோ?

மா: எதுடாபக்தி? வேலைசெய்கிறஇடத்திலேஇருந்து பொருளைத் திருடிக்கொண்டு போவது பக்தியா?

குற்: ராமதாசரும், மாணிக்கவாசகரும், ஏறக்குறைய பத்து வீசை தங்கம் திருடினவர்களாயிற்றே.

மா: அவர்கள், பக்தர்கள்!

குற்: நானுந்தான்.

மா: அவர்கள் அவதார புருஷர்கள்.

குற்: நான்மட்டும்?

மா: போக்கிரித்தனமாகப் பேசுகிறாய். ஜாக்ரதை, இந்தக் குற்றத்தோடு, கோர்ட்டை அவமதித்த குற்றமும் ஏற்படும்.

குற்: நீங்கள் பக்தியையே அவமதிக்கும்போது........................

மா: நிறுத்து.

குற்: ஐயா! வழக்கிலே, என்ன நேரிடுமோ எனக்குத் தெரியாது. நான் கள்ளனல்ல, எனக்குச்செட்டியார் கடையிலிருந்துகற்பூரத்தை எடுத்துக்கொண்டுபோகும்போது, அவர் சொன்னபடி செய்யவேண்டும் என்ற எண்ணந்தான். வழியிலே ஆலமரத்தடி சாமியாரின் பேச்சிலே மயங்கினேன். பிறர் சொத்தாயிற்றே, இதை அவர் சொன்னதற்கன்றி வேறுவிதமாக உபயோகித்தல் நியாயமல்லவே என்றுநினைத்தேன். முன்னாள் இரவு, பாகவதர், பாதுஷாவின் வரிப்பணத்தை பக்த இராமதாசர்செலவிட்டது தர்மம், நியாயம், பக்தியின் பெருமை என்றெல்லாம் கூறினதும், அதை என் எஜமானர் ஆமோதித்ததும், அங்கே கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், ராமா! ராமா!என்றுஉச்சரித்ததும், என் நினைவிலே வந்தது. உடனே கற்பூரம் செட்டியாருடையதாக இருந்தால் என்ன, பக்தியேமேல், என்று உறுதி பிறந்தது. விநாயகருக்குக்கொளுத்தினேன். ராமதாசரும் மாணிக்கவாசகரும் கள்ளர்களானால், நானும் கள்ளன்தான்!

மா: உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? இராமதாஸ் ஆகிவிடுவாயா நீ?

குற்: ஆகாது! ஆனால் குருவியும் பறவைதான், பருந்துபோலவே. இராமதாசும் நானும் பக்தர்இனம் தான்.

மா: இந்தப்பசப்பு வேண்டாம் அந்தப்பழங்கதைகளைப் பேசித்தப்பித்துக்கொள்ளமுடியாது.

குற்: அந்தப் பக்திமான்களின் கதைகள் நீதிமன்றத்துக்கு ஏற்றவையல்லவா?

மா: இதுகோர்ட்! நீதிமன்றம்! இங்கே சட்டத்தின்படிதான்வழக்குகள் விசாரிக்கப்படும்.

குற்: நீதிக்கும் சட்டத்துக்கும் சம்பந்தம் இல்லையா?

மா: போதும், வாயாடாதே. ராமதாசர் செய்தால் நீயும்செய்ய வேண்டுமோ? ராமதாசருக்கு இருந்தபக்திஎப்படிப்பட்டது!நீ..........?

குற்: என்பக்தி அதற்கு எள்ளளவும் குறைந்ததல்ல. நீங்கள் நம்பாததாலேயே என்பக்தி குறைந்துவிடுமா என்ன?

மா: நீபக்திமானா அல்லவா என்பதுபற்றி எனக்கு அக்கரைஇல்லை. கோர்ட்டின் முன் நீஓர் கள்ளன் என்று நிறுத்தப்பட்டிருக்கிறாய்.

கு: உண்மைதான்! அந்த நாட்களிலே ராமதாசரும் மாணிக்கவாசகரும் நிறுத்தப் பட்டது போல.

மா: மறுபடியும் அந்தப்பழய கதையைப் பேசாதே. அந்தக் காலம் வேறு இந்தக்காலம்வேறு. அந்தகாலத்து நீதிவேறு இந்தக் காலத்து நீதிவேறு.

கு: அப்படிச் சொல்விதுசரியா! இன்றும் ஜன சமுதாயம் அந்தக் காலத்திலே நீதி என்று எவைகளை நம்பினார்களோ அவைகளையே தானே இன்றும் நம்புகிறார்கள். அந்தக்காலத்திலே அரசமரத்தைச் சுற்றிவந்தால் கர்ப்பம் தரிக்கும் என்று தாய்மார்கள் எண்ணி வந்தார்கள். இன்றும்சுற்றிக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒருதினம் தங்கள் மனைவியார் சுற்றுவதை நானே பார்த்தேன்.

(கோர்ட்டில் சிரிப்பு)

பக்தியைக்கேலிசெய்யாதீர்கள். நமது நீதிபதி எவ்வளவு அறிவாளி, படித்தவர்! அரசமரத்தைச் சுற்றுவது சிரிப்புக்கிடமானதானால், ஐயா, அம்மாவைத் தடுத்திருப்பார்களல்லவா? நான் எவ்வளவோ, பெரியபெரிய உத்யோகஸ்தர் வீட்டுத் தாய்மார்களை அந்த அரசமரத்தண்டை பார்த்திருக்கிறேன்.

மா: உன் புராணப் பிரசங்கம் போதும்.

கு: ஐயா! என் பேச்சைநிறுத்தும்படிக் கட்டளையிடுவது போல நாட்டிலே நடைபெறும் புராணப் பேச்சை நிறுத்தியிருந்தால், நான் இன்று கள்ளன் என்று குற்றம் சாட்டப்பட்டுத்தங்கள்முன் நிறுத்தப்பட்டிருக்க மாட்டேன்.

(5-ம் பக்கம் பார்க்க)


**ராஜம் விலாஸ்**

கைத்தறி ஜவுளிகள் :: கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! • உத்தரவாத ஜரிகை!!

80, 100-நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.

திராவிட நாடு

காஞ்சி] 18—8—46 [ஞாயிறு

# குற்றவாளி — கூண்டில் இல்லை!!

பொன்மலையில் ரயில்வே தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதாக உள்ளனர்.

பலநகரசபைகளிலே, தோட்டி வேலை செய்பவர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

"சர்க்கார் சிப்பந்திகள்" வேலை நிறுத்தம் செய்யக் கிளம்புகின்றனர்.

அல்லலைத் தாங்க மாட்டாமல், பள்ளிக்கூட ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடிவுசெய்துள்ளனர்.

பல ஆலைகளிலே இதேநிலை.

போக்கு வரத்து ஸ்தாபனங்களிலே இதேநிலை.

கிராமாதி காரிகளின் குறைகளும் அவர்களை அதேநிலைக்குக் கொண்டுவந்து விடுகிறது. வயலிலே பாடுபடும் உழவனும், கலப்பைமீது கண்ணீர் சிந்திச் சிந்திப் பார்த்து, விட்டு, இதே நிலைக்கு வருகிறான்.

இத்தனை வேலை நிறுத்தங்களும், விளையாட்டுக்கும் பொழுது போக்குக்குமாக நடத்தப்படுகின்றன?

"பசியுடன் பாடுபடும் தபால்காரன்" என்று பாட்ஜ் அணிந்து கொண்டு தபால்காரர் சென்றனர்.

"குறைந்த சம்பளம் பெற்றுக் குமுறும் சர்க்கார் குமஸ்தாக்கள்" என்று சர்க்கார் சிப்பந்தி பாட்ஜ் அணிகிறார். இவை, விளையாட்டா? ஏழ்மையை மறைத்துக் காட்டவும் பசித்தாலும் எப்படி அதனை இலஜ்ஜையின்றி வெளியே எடுத்துச் சொல்வது என்று எண்ணி மறைத்தும் தமது வறுமையைக் கூறி, என்மற்றவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தவேண்டும்என்ற பெருந்தன்மையுடனும் நடந்துவந்தவர்கள் இன்று,

> எங்கள் வாழ்வு துறைஉடையது
> போதுமான வருமானம் இல்லை
> பசியாற உணவுக்கு வழி இல்லை
> வறுமையால் வாடுகிறோம்

என்று பகிரங்கமாகக்கூறுகிறார்கள். அவர்கள் எவ்வளவு குமுறிக் குமுறியிருந்து விட்டுக் கூறத் தொடங்கினர் என்பதை எண்ணிப்பார்க்கும் எவரும், அவர்கள்பால் பரிவு காட்டாமலிருக்க முடியாது.

குறை கூறிக்கொண்டே இருந்தவர்கள், புதிதாக ஒருகுறை கூறினர், என்பது அல்ல இப்போது உள்ளநிலைமை.

எவ்வளவு குறைகளையும் தாங்கும் சக்தி பெற்றிருந்தவர்கள், அந்தத்தாங்கும் சக்தி போய்விட்டதால், வெட்கத்தைவிட்டுவெளியே சொல்லியாவது, நமது குறைகளைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றல்லவா, முன்வந்துள்ளனர். இவர்கள்மீதா சீறிவிழுவது? இவர்களின் நிலைமையை அறிந்து, பரிவு காட்டுபவர்களை எல்லாம், காங்கிரசின் எதிரிகள் என்று ஒரே வாய்வீச்சினுல்சாய்த்துவிடுவதா! காங்கிரசின் எதிரி, யார்? படுகிறபாட்டுக்கு ஏற்ற அளவு பணம் கேட்கிறவர்களை, சக்திக்கு ஏற்ற அளவு வேலை செய்கிறோம் (சக்திக்குமீறிய அளவுகூட) தேவைக்கு ஏற்ற அளவு வசதிகள் தரவேண்டும் என்று கேட்கிறவர்களை ஆதரிப்பவர்கள் அத்தனைபேரும், காங்கிரசின் எதிரிகள்என்றால், நாளாவட்டத்தில், மந்திரி சபை தவிர (பார்லிமெண்டரிகாரிய தரிசிகளைக்கூடச் சேர்த்துச் சொல்லமுடியாது!) மற்றவர்கள் அத்தனைபேரும், காங்கிரஸ் எதிரிகள் பட்டிக்குத்தான், போய்ச் சேரவேண்டி நேரிடும். இதுநியாயமுமல்ல, நல்லதுமல்ல!

இந்த மாகாணத்தில், 1,20,000 ஆசிரியர் உள்ளனர். இவர்களில் 60,000 ஆசிரியர்களுக்கு மேலாகவே, மாதம் 30 ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள். 40,000 ஆசிரியர்கள், 31-ரூபாயிலிருந்து 50-ரூபா வரை சம்பளமாகவும், 2000 ஆசிரியர்கள் 100-ரூபாயும் அதற்குமேற்பட்ட தொகையும் பெறுகிறார்கள்.

இந்த நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு, "நீங்கள் புனிதமான தொழிலிலேஈடுபட்டவர்கள், கேவலம் பணம் உங்கள் குறியாகஇருக்கக்கூடாது. புண்யகாரியம், பிள்ளைகளுக்குக் கண்திறப்பது. எழுத்தறிவித்தவன் இறைவனுகும்." என்று புகழ்மாலை சூட்டிவிடுகிறோம் புண்யகாரியத்திலே ஈடுபட்டுள்ள போதிலும் இவர்களுக்கும் பசி தாகம் ஏற்படுகிறது, குடும்பப் பொறுப்பு இருக்கிறது! ஆசிரியர்களிடம் தரப்படும் ரூபாய்க்கும் அறு பதினறுதான் கிடைக்கும். இந்நிலையில் 30-ரூபாய் சம்பளம் பெற்றுக்கொண்டு, எப்படி, 60000 ஆசிரியர்கள் வாழ்வை நடத்தமுடியும்? லோகல்போர்டு பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள விகிதம் 1934-ம் வருஷம் ஏற்பட்டது, அதாவது அளவரிசிவரும்என்று மக்கள் கனவுகூடக் கண்டிருக்கமுடியாத நாளில், கள்ளமார்க்கட், கொள்ளை இலாபம், வங்கப் பஞ்சம், கோதுமைச் சத்து, அவுன்சு உணவு, என்ற சொற்களே நடமாடாத நாட்களில், போர்வாடைக்கு முன்பு, ஏற்பட்ட சம்பள முறை.

1934—1946! எவ்வளவு மாறுதல்! எத்துணைப் புதுப்பிரச்னைகள்! எவ்வளவு நெருக்கடிகள். வாழ்க்கைச் செலவு, இந்த 12-வருஷ காலத்திலே எவ்வளவு உயர்ந்துவிட்டது. 1934ல், சம்பளவிகிதம் நிர்ணயித்தபோதே, "இது மிகக் குறைவு". என்றனர். 12-ஆண்டுகளாக இதே சம்பளம். விலைவாசிகள் விஷம்போல்ஏறின! சம்பளம், "கல்லுப் பிள்ளையாராகவே" இருந்தது—இருக்கிறது. என்ன செய்வார்கள் ஆசிரியர்கள்? இவர்களைக் கிளர்ச்சிசெய்யும்படி யார்தூண்டவேண்டும்?

இங்கே மட்டுந்தானு ஆசிரியர்கள், சம்பளஉயர்வுக்காகப்போரிடுகின்றனர். சென்னையை முந்திக் கொண்டது. ஐக்கிய மாகாணம். அங்கு 40000 ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பத்துப் பதினைந்து நாட்கள் வேலைநிறுத்தம்செய்து, பிறகு, குறைந்தது 25-ரூபாயாவது சம்பளம் தரப்படும் என்ற வரம்பெற்றனர் காங்கிரஸ்மந்திரியிடம். இங்கே பிரதம மந்திரி பிரகாசம், ஊர்வலமாகச் சென்று தமக்குஉற்றகுறையைக் கூறிய ஆசிரியர்களை, மனம் புண்படும்படிப் பேசினர் என்று பத்திரிகைகளிலே பார்த்தோம்; ஐக்கிய மாகாணக் கல்வி மந்திரியும் ஆசிரியர்கள்மீது சீறித்தான் விழுந்தாராம்!

செகண்டரிகிரேட் ஆசிரியருக்கு, சர்க்கார் பள்ளிக்கூடமாக இருந்தால் மாதம் 30-ரூபாய்; போர்டு பள்ளிக்கூடமானுல் 24, சர்க்கார் உதவிபெற்று நடத்தப்படும் பள்ளிக்கூடமானுல் 18.

ஹையர்கிரேட் ஆசிரியருக்கு சர்க்கார் பள்ளியில் 23, போர்டு பள்ளியில் 20. சர்க்கார்உதவிதரும் பள்ளிக்கூடம் 14-ரூபாய் தருகிறது! (இதிலே 100க்கு 15-ரூபாய் மானேஜ்மெண்ட் செலவுக்குப் போய்விடும்!!)

இந்த நிலையிலே உள்ள ஆசிரியர்கள், ஊர் உலகம் அறியாதவர்களல்ல!! இவர்களை யார் கிளப்பிவிடவேண்டும்? அதிகவேலை, போதுமான போஷாப்பு இல்லை! என்ன விளையும் இதனுல்? உடலைத்தேய்த்து உயிரைத் தேயவைக்கும் இருமல்! ஒட்டிய உடல்! குழிவிழுந்த கன்னம்! ஒளிஇழந்தகண்கள்! கிழிந்த கோட்! வீட்டில் வேதனை! வெளியே நடமாடும்போது வெட்கம்! வகுப்பில் உட்காரும்போது அலுப்பு! அலுப்பினுல் ஆத்திரம்! ஆத்திரத்தை ஓரளவுக்குக் குறைத்துக்கொள்ள, கொஞ்சம் பிரம்பு வீச்சு!—இதுதான் ஆசிரியர்நிலை—அறிவளிக்கும் பேருபகாரியின் பிழைப்பின் இலட்சணம். கூனிக் குமுறிக்கொண்டு, தள்ளாடிநடந்து ப்பள்ளிக்குச்செல்லும்போது, ஆசிரியர் பார்க்கிறார், பேதையைமிரட்டும் பூஜாரி தன்னைவிட "நன்றாக" வாழ்வதை! திதி நடத்தும் "வாத்தியார்" திவ்யமாக வாழ்வதை! இவரை, யார்கிளப்பிவிடவேண்டும்? ஒவ்வோர் "இருமலும்" அவரைக் கிளப்பிவிடுகிறது — காங்கிரசின் எதிரிகளா தூண்டவேண்டும்! இப்போது, ஆசிரியர்கள், இதழ்களில் பார்ப்பார்கள், சென்னை நகரத் தோட்டிகள், தினம் 2-ரூபாய் கூலிகேட்டு வேலை நிறுத்தம் செய்கிற செய்தியை. யார் தூண்டிவிடவேண்டும்!

1934க்கும்1946க்கும்இடையே, வாழ்க்கைச்செலவு பலப்பலமடங்கு அதிகரித்துவிட்டது என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆசிரியர்களின்சம்பளமோ 1934ல் இருந்த நிலைமையிலேதான்! இது நியாயமா? முறையா? கல்வியை வளர்க்கும் வழியா? அறிவுக்கு அரணு?

1934ல், சர்க்கார், மக்களிடமிருந்து பெற்ற பணம் வரியாக, 14-கோடி. 1946ல் 48-கோடி ரூபாய் சர்க்காருக்கு மக்கள் தருகின்றனர். ஆனுல் ஆசிரியர்களுக்குச் சர்க்கார், அந்த 1934ல் போட்ட சம்பளமேதான் தருகிறார்கள், என்றுல், ஆசிரியர்களைக் கிளர்ச்சிசெய்யும்படித் தூண்ட ஆள் வேறு வேண்டுமா என்று கேட்கிறோம்.

யார், கிளர்ச்சிசெய்தாலும், வேறுயாரோ தூண்டிவிடுகிறார்கள் என்று சமாதானம் கூறுவது, நல்லதுமல்ல, நியாயமுமாகாது.

ஆலைத் தோழனு? ரயில்வே தொழிலாளியா? தபால் தோழரா? கிராமாதிகாரியா? ஆசிரியரா? தோட்டிமார்களா?—யாராக இருந்தாலும் சரி, இவர்களெல்லாம், யாராலோ கிளப்பிவிடப்படுகிறார்கள், யாரோ தூண்டிவிடுகிறார்கள், என்று கூறுவது பொறுத்தமற்ற சொத்தை வாதம், மட்டுமல்ல, முதலமைச்சர், (தம்மையும் அறியாமல்) நாடு பூராவிலும் பாட்டாளி உலகெங்கும், காங்கிரஸ் எதிரிகள் ஆதிக்கம்செலுத்துகிறார்கள்என்று, கூறுவதாக முடியும்! பாட்டாளி உலகு, காங்கிரசல்லாதாரிடம் இருக்குமானுல்—பிரகாசம் மந்திரிசபையிலே இருள் நிச்சயம் ஏற்படும்!

தூண்டிவிடுகிறார்கள், வேன்... மென்றே கிளப்பிவிடுகிறார்... என்றே வைத்துக்கொள்வே... வாதத்துக்காக! என்ன ... வேண்டும் மந்திரியார்? ... வர்களைத் தூற்... போதுமா, தூக்கிலி... தொல்லைபோய்விடும... மக்களிடையே, கு... மட்டும்... படி...

சம்காரு, தூண்டிவிடுபவர்கள் வெட்கத்தால் தலையைத் தொங்கவிட்டுக்கொள்ளும்படி, தொழிலாளர்களின் குறைகளைத் தீர்த்துவிட்டு, "யாராக இருந்தாலும் சரி, உங்கள் சாமர்த்தியத்தை எல்லாம் காட்டுங்கள். எங்கே ஒரு தொழிலாளர் தகராரையாவது காட்டுங்கள் பார்க்கலாம்! உண்டாக்குங்கள் பார்க்கலாம்! முடியாது! நீங்கள் தலைகீழாக நின்றாலும் அது நடவாது. என் ஆட்சியிலே பாட்டாளி உலகு பரிபூரணத்திருப்தியுடன் வாழ்கிறது." என்று கூறுவதுதானே.

"சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டச் சர்க்கார் சகல சக்தியையும் உபயோகிக்கும்" என்கிறார் முதலமைச்சர். பூ! இதென்ன பிரதாபம்! சக்திகள் இருக்கும் இடத்திலே, யாரை உட்காரவைத்தாலும் சொல்லலாம் அதுபோல, செய்யவும் முயலலாம்! இதைச் சொல்ல, செய்ய, போக்துரை போதுமே, காங்கிரஸ் மந்திரிசபை வேண்டாமே!!

உண்மையிலேயே, தூண்டிவிட்டவர்கள், கிளப்பிவிட்டவர்கள் யார் என்று அறிய முதலமைச்சர் அவாக்கொண்டால், நாம், அந்தக் குற்றவாளிகளைக்காட்டத்தயாராக இருக்கிறோம். அவர்கள் நெடுந்தூரத்திலும் இல்லை!!

"இப்போதுள்ளகாலமாறுதலின் பயனுக, விலைவாசிகள்ஏறிவிட்டன, வாழ்க்கைச் செலவு அதிகமாகிவிட்டது, போருக்குமுன்பு 500ரூபாய் சம்பாதித்துக் குடும்பம் நடத்தியவரால், அவர் தேசபக்தராக, தேசோத்தாரகராக, தேசியவீரராக, இருந்தாலும், இப்போது குறைந்தது 3 மடங்கு அதிகமாகப்பெற்றுதான், வாழ்க்கையை நடத்த முடியும்" என்று காங்கிரஸ் தலைவர்கள், சட்டசபையிலே தெளிவாகக்கூறிவிட்டனர்; மந்திரிமார்கள், காரியதரிசிகள், மெம்பர்கள் ஆகியோர், இந்த "வாதத்தின்" துணைகொண்டு தத்தமது சம்பளத்தை அதிகப்படுத்திக்கொண்டனர்.

சொல், செயல், இரண்டின்மூலமாகவும், "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" "தன்னலம் மறுத்தோர்" இந்த நாட்களிலே சம்பளம் உயர்த்தினுல் ஒழிய, வாழ முடியாது, என்பதை நாட்டுக்கு எடுத்துக்காட்டிவிட்டனர்—"தூண்டுதல்" இதனைவிட வேறு வேண்டுமா? "உச்சிமீது வானிடிந்துவீழுகின்றபோதிலும்" அச்சமில்லாத அரும்பெரும் தலைவர்களே, அரிசி ரூபாய்க்கு இரண்டுபடி தானே ஐயா! எப்படி, இந்தநாளில் நாங்கள் வாழமுடியும், ஆகவே சம்பளத்தை உயர்த்திக்கொள்கிறோம் என்று கூறிவிட்டனர். இவர்களே குற்றவாளிகள்! இதிலே நானுமல்லவா இருக்கிறேன் என்று பிரகாசம்காரு கேட்பார். "ஆஹா! பந்துலுகாருவும் இருக்கத்தான் செய்கிறார்!

நாட்டை மீட்டிடும் தலைவர்களே, வீட்டை நடத்தப்போது... மான பணம் தேவை என்று தெ... வித்தானபிறகு, பாட்டாளி ம... ளின் "வருவாயை" அதிகப்ப... தச்சாக்குக் கூறுவதும், ... அவர்களைக் கி... என்று பே...

Best copy available.

## குற்றவாளி

3-ம் பக்கத் தொடர்ச்சி

உணர்ந்த மந்திரிமார்கள், உழைப்பால் மெலிந்து, பஞ்சத்தால் தாக்கப்பட்டு, கள்ளமார்க்கட் கொடுமையால் நசுக்கப்பட்டுத், தத்தளிக்கும், தரித்திரவாழ்வினரின் வாழ்வுச்செலவு, தாங்கமுடியாத சுமையாகிறதே, என்று உணர மறுக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறோம்.

தாமாக முன்வந்துச்செய்திருக்க வேண்டியதைத், தொழிலாளர், தீயின் மத்தியில்நின்று கேட்டும் செய்ய மறுத்துப், பாட்டாளிஉலகின் நிலையைக்குலைக்கிறார்கள் என்றுகுற்றம் சாட்டுகிறோம்.

தொல்லை பொறுக்க மாட்டாமல், பொதுமக்கள் சர்க்காரின் செவியில் ஏழையின் அழுகுரல்விழும் என்ற நம்பிக்கையுடன் பாட்டாளிகள் கிளர்ச்சி செய்வதை, யாரோ தூண்டிவிடுகிறார்கள், அவர்கள் காங்கிரஸ் விரோதிகள் என்று கூறி, மக்களின் கருத்தைத்தவறான பாதையிலே திருப்ப முயற்சிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறோம்.

ஏழைகள் தலையில் 3512 இலட்ச ரூபாய் வரியாகவும், பணக்காரர் மீது 543 இலட்சம் வரியும் ஏற்றும்படியான, ''பூர்ஷுவா,'' (முதலாளித்வ) பட்ஜட்தயாரித்தனர்என்று குற்றம் சாட்டுகிறோம்.

எனவே கொந்தளிப்பும் குமுறலும், கிளர்ச்சியும் வேலை நிறுத்தமும், அதன் விளைவுகளானவேதனைகளும், யாரோ கிளப்பிவிட்டதல்ல தூண்டிவிட்டதல்ல!

கிளப்பிவிடுவது; தூண்டிவிடுவது: என்றவார்த்தைகளைத்தாராளமாகப் பலர்உபதேசித்து விடுகின்றனர். குற்றச்சாட்டிலேஒன்றாகக்கருதவும் படுகிறது, தூண்டிவிடும் செயல்.

பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ்இருப்பதால் ஏற்படும் கேடுகளையும் அவமானத்தையும் அறிந்துகொள்ளாமல் இந்திய உபகண்டத்து மக்கள் உணர்வற்றுக்கிடந்தபோது காங்கிரசானது, மக்களிடம் அன்னிய ஆட்சியின் கேடுகள், அடிமைத்தனத்தால்வரும் இழிவுகள் ஆகியவற்றவை எடுத்துக்கூறி உணர்வு பிறக்கச்செய்து, அன்னிய ஆட்சியை எதிர்க்கும் துணிவு உண்டாகச்செய்தது. அதற்காக அவர்களுக்கு மக்கள் சிலைகள் அமைத்தனர்; கவிகள் சிந்துபாடினர்; கன்னியர் ஆர்த்தி எடுத்தனர். எழுத்தாளர் புகழோவியம் தீட்டினர்.

ஆனால் இந்தக்காரியமாற்றியவர்களைப்பிரிட்டிஷார் என்ன கூறினர்?

தூண்டிவிடுகிறார்கள்! கிளப்பிவிடுகிறார்கள்!! என்றுதான். ஏனோ, தங்கள் திருவாயிலிருந்துப் அதே சொற்கள் கிளம்பிவிட்டன என்று முதலமைச்சரைக் கேட்க விரும்புகிறோம்.

தூண்டிவிடுகிறார்கள்!
கிளப்பிவிடுகிறார்கள்!!

ஆம்! இவை, பழையசொற்கள்! மிகமிகப் பழைய வார்த்தைகள். மாளிகையிலே இருந்துவந்தமமதை நிறைந்த மன்னன், முஹேஹரியின் இதழிலே மதுகண்ட சீமான், உலகிலே ஏமாந்தவர்கள் எங்கெங்கு உண்டு என்று புள்ளி விவரக்கணக்கெடுத்துச்சளைக்காயல் சுறண்டும் ஏகாதிபத்யக்காவலர், இவ்வளவு பேர்வழிகளும் இந்த இரண்டே சொற்களை உபயோகித்தனர். தூண்டிவிடுகின்றனர்! கிளப்பிவிடுகிறார்கள்! என்றே அவர்களும்கூறினர். தாங்களும் கூறினீர்! ஏனோ?

வேலை நிறுத்தத்தைக் கிளப்பிவிடுபவர்களைக் காங்கிரசின்எதிரிகள் என்கிறார் பிரகாசம். யார், கிளப்பிவிடுகிறார்கள்?

தொழிலாளி வீட்டிலே உள்ள
உடைந்த பாண்டம்
அவன் குடி இருக்கும்
ஓட்டைக் கூரையுள்ள குடில்
அவன் உடலை மூடிக்கிடக்கும்
கந்தல் சட்டை
அவனுடைய
நோயாளி மனைவி
அவனுடைய
தேய்ந்துபோகும் குழந்தைகள்

தொழிலாளர்கள், குறைந்த சம்பளம் பெறும் அதிகாரிகள் ஆகியோருக்கு வேலைநிறுத்தம் விளையாட்டுமல்ல, வீம்புமல்ல. வேதனை—தாங்கமுடியாத வேதனை. அவர்களை இந்நிலையில் இருக்கச்செய்துவிட்டுப், பொதுமக்கள் சர்க்கார் என்ற புகழுரையையும் ஒட்டவைத்துக்கொண்டு, கிளர்ச்சி செய்தால் ஒடுக்கிவிடுவோம் என்று கூறுவது குடியரசுக்கோட்பாட்டையே உதறித்தள்ளும் குற்றமாகும்! ஆனால் அந்தக் குற்றவாளிகள்—கூண்டில் இல்லை. பவனிவருகிறார்கள், மற்றவர்களைத்தூற்ற!

---

## ★ கோவா கிளர்ச்சி ★

சிங்கம், பங்கப்பட்டநேரத்திலே செந்நாய் ஒன்று ஊளையிடுவது போன்றதோர் சம்பவம் நடைபெறுகிறது. பலம்பொருந்தியபிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பணிந்துவரும் இந்நாளிலே, சின்னஞ்சிறு, போர்ச்சுகல், தன் அதிகாரத்தை இங்கு நடத்திக்கொண்டேஇருக்க முடியும் என்று எண்ணுகிறது. அடக்குமுறை மூலம், தன் ஆதிபத்யத்தை நிலைநாட்டமுடியும் என்று கனவுகாண்கிறது. அதன் அடக்குமுறை, ஜுரவேகத்தில் துவங்கிவிட்டது, அங்குள்ள அதிகாரிகள்வெறி போல் பேசுகின்றனர்.

[illegible] போர்க்கப்பல் [illegible] களின் இரத்தத் [illegible] ட்டமுர [illegible]

இந்தப்போர்ச்சுகீசியர்இப்போது நாட்டு விடுதலைக்காகப், பேச்சுச் சுதந்திரத்துக்காகப்போராடிய, தோழர் குன்ஹாவைத் தூக்கிக்கொண்டு போகின்றனர், கடல் கடந்து, நெடுந்தூரத்திலே உள்ள ஆப்பிரிக்காவிலே சிறைவைக்க—எட்டு ஆண்டுத்தண்டனை, குன்ஹாவுக்கு ஏன்? பொதுக்கூட்டத்தில்பேசியகுற்றத்துக்காக. இந்தப்போக்குபோர்ச்சுகல் சர்க்காரின் மட்டரகமான அறிவைத்தான் அகிலஉலகுக்கும்எடுத்துக்காட்டுகிறது.

இந்திய உபகண்டத்துச் செல்வத்தைச்சுறண்டுவதற்குக் கிளம்பியவெள்ளைக்கும்பலில், முதலாவதாகவந்த கும்பல் இந்தப்போர்ச்சுகீசியர். பொதுவாகவே, ஏகாதிபத் [illegible] களுக்கெல்லாம் ''கடைக்கால்'' [illegible] ட்டவர்கள், கடற்கொள்ளைக் [illegible] ள். அத்தகைய கொள்ளைக் [illegible], 14, 15வது நூற்றாண்டு [illegible] விலே சிறு சிறு கலம் [illegible] டு, திக்குதிசை கவ [illegible], திடீர்த்தாக்குதல் [illegible] ளை அடித்து, மக் [illegible] மைவர்த் [illegible] இரத்தக்

கடல் ஓநாய்களின் இரத்தவெறிக்கு த்தென்அமெரிக்கா முதற்கொண்டு சிங்களத்தீவுவரையிலே பல்வேறு நாடுகள் பலியாயின. இவர்கள் பணம்திரட்டிய பிறகு, ''பெரிய மனிதர்''களாயினர்! இந்தப்பெரிய மனிதர்கள் பிறகு தத்தமது நாடுகளிலே, வியாபாரக் கோமான்கள் ஆக்கப்பட்டு, ஆங்காங்கு இருந்த அரசர்களுக்கு ஆசைகாட்டி, பல கம்பெனிகளை உண்டாகச்செய்து, அவைகளை, இந்திய உபகண்டத்தின்மீது ஏவினர். அங்ஙனம் இங்கு புகுந்த கூட்டத்திலே, ஒன்றுஇந்த போர்ச்சுகீசியர்! 'பூர்வாஸ்ரமம்' இப்படி! இப்போது பேசுவதோ, சர்வதேசநீதி நியதிபற்றி!

போர்ச்சுகலை, இரண்டாம் ஜான் என்றமன்னன் ஆண்டுகொண்டிருந்தபோது, வாஸ்கோடிகாமா என்பவனைக்கடலிலேபுதுமார்க்கங்களும், புதியதேசங்களும்உள்ளனவாஎன்று பார்த்துவர அனுப்பினான். வாஸ்கோடிகாமா, 1498ல், ஆப்பிரிக்காவைச்சுற்றிக்கொண்டு, கீழ்நாடுகளுக்குவரக்கூடிய கடல் மார்க்கத்தைக்கண்டுபிடித்தான். ஆப்பிரிக்கத்தென்முனைக்கு அவனிட்ட பெயர், நம்பிக்கைமுனை என்பதாகும். அவன் கடல்மார்க்கத்தைக் கண்டுபிடித்தான், பிறகு, அதுவே சுறண்டிப்பிழைக்கும் மார்க்கமாயிற்று, பல்வேறு வெள்ளை இனத்தவருக்கு.

காமா காலத்தில், முதன்முதலாகப் போர்ச்சுகீசியர், கள்ளிக்கோட்டையில் காலடி வைத்தனர். கைலாகு கொடுத்து வரவேற்றார் ஜாமோரின்! மாப்பிள்ளைமார்எதிர்த்தனர். படுகொலை செய்தனர் (முஸ்லிம்)மாப்பிள்ளைமார்களை, போர்ச்சுகீசியர்.

ஆரம்பமுதலே, போர்ச்சுகீசியரின் திட்டம், முஸ்லிம் செல்வாக்கை அழிப்பதாகவே இருந்தது, ஏனெனில் கடலிலும், வியாபாரத்திலும்; எகிப்து முதல் கள்ளிக்கோட்டைவரையில் முஸ்லிம்களுக்கே அதுபோது ஆதிக்கம். ஐரோப்பாவிலேயேமுஸ்லிம்களின் செல்வாக்குநிலைத்துவிடக்கூடுமோ என்றுவெள்ளைவர்க்கத்தவர்பயந்துகொண்டிருந்த காலம் அது. அந்தச் சமயத்திலே, கள்ளிக்கோட்டையில் காலடிவைத்தனர் போர்ச்சுகீசியர். முதல் வேலை, முஸ்லிம்களை அழிப்பதாக இருந்தது.

1502ல் மீண்டும் வந்தான் வாஸ்கோடிகாமா. கொச்சி மன்னனுடன் குலவினான். கொச்சி, கண்ணனூர் ஆகிய இடங்களிலே வியாபாரஸ்தலங்களை அமைத்தான். அன்றுதொட்டு இன்றுவரை இருந்துவருவதும், இந்த உபகண்டத்தை உருக்குலைத்ததுமான, பிளவும் மாச்சரியமும் அன்று போர்ச்சுகீசியருக்கு உதவியாக இருந்தது.

கொச்சிராஜாவுக்கும் ஜாமோரினுக்கும் சச்சரவு. ஜாமொரின், முதலிலே போர்ச்சுகீசியரை வரவேற்றமகானுபாவன். ஜாமோரின் என்ற வார்த்தையைக்கேட்டதும், யாரோ வெள்ளை வர்க்கம் என்று எண்ணம் உண்டாகும். ஆனால் உண்மை அதுவல்ல. ஜாமோரின் ஆரிய ஜெமீன்தார். இவருடைய துணைதான் முதலில் போர்ச்சுகீசியருக்கு அதாவது, அன்னியன் அடி எடுத்துவைத்த அன்றே, அவனுக்குக் கைலாகு கொடுத்து அழைத்தவர் ஒரு ஆரியர்! இரண்டாம் முறையோ, கொச்சி மன்னனுக்கும் ஜாமோரினுக்கும் சச்சரவு. இதனைப்போர்ச்சுகீசியர் தமக்குச் சாதகமாக உபயோகித்துக் கொண்டனர். கொச்சி பக்கம் சேர்ந்துகொண்டு ஜாமோரினைப் போர்ச்சுகீசியர்தோற்கடித்தனர். அத்தோடு நிற்கவில்லை, அந்தப் பகுதியிலே இருந்த முஸ்லிம்களை முறியடித்தனர். மலையாளப் பகுதியிலே முஸ்லிம்களுக்கு இருந்த மகத்தான பலத்தைப் போர்ச்சுகீசியர் அழித்தனர்.

பிறகு, போர்ச்சுகீசியர், வியாபாரக் கோட்டைகளை, பம்பாய், கல்கத்தாபகுதிகளிலும்அமைத்துக்கொண்டு அட்டகாசம்செய்தனர். எந்தக் குட்டி ராஜாக்கள் ஒருவருக்கொருவர் முட்டிக்கொண்டாலும், போர்ச்சுகீசியர் அதிலே நுழைவர்; பிளவை அதிகப்படுத்த.

ஆல்புகர்க் என்ற போர்ச்சுகீசியன் காலத்திலே, இந்தச் செல்வாக்கு உச்சநிலை அடைந்து முஸ்லிம்களின் வியாபார ஆதிக்கமே அடியோடு ஒழிந்துவிட்டது. அந்தக்காலத்திலேதான். 1510ல், பீஜபூர் சுல்தானிடமிருந்து, கோவாவைப் போர்ச்சுகீசியர் கைப்பற்றினர். அந்தக் கோவாவில்தான், இன்று குன்ஹா பேசக்கூடாது என்று தடை உத்திரவு; அதைமீறினதற்காகத்தான், எட்டு ஆண்டு கடுங்காவல்தண்டனை, கண்காணாத் தீவில். இந்த வேதனையுடன் இணைந்திருக்கிறது ஒருவேடிக்கை. இன்று, போர்ச்சுகீசியர் வசமுள்ள இந்திய பூமியை விடுவிக்கப் போர் தொடுத்ததற்காகத் தண்டனை பெற்ற வீரனின் பெயர் குன்ஹா. 1529 முதல் 1538 வரை, போர்ச்சுகீசியர் வசமிருந்த இந்திய பூமிக்கு வைசிராயாக இருந்தவன் பெயரும், குன்ஹா! இவன் காலத்தில் டய்யூ, கோட்டையாக்கப்பட்டது.

போர்ச்சுகீசியர்களின் போக்கு புனிதமானது என்றும், மக்களை அவர்கள் மக்களாக நடத்துபவர்களென்றும், ஜாதி பேதத்தை ஒழித்தனர் என்றும், இப்போதுள்ள போர்ச்சுகல் அதிகாரி அறிக்கை விடுகிறார். ஆரம்ப காலமுதல் போர்ச்சுகீசியரின் போக்கு, நாகரிகத்தையோ நற்கொள்கையையோ அடிப்படையாகக் கொண்டதல்ல.

1. நாடு பிடிக்கும் ஆசை.

2. உள்நாட்டுக் குழப்பத்தைத் தூண்டினது.

3. மதமாற்றத்தை வலுக்கட்டாயமாகச் செய்தது.

4. முஸ்லீம்களைக் கொடுமைப்படுத்தியது.

5. ஆட்சிமுறையிலே அநாகரீகமான கொடுமைகள் செய்தது எனும், குற்றச்சாட்டுகளிலிருந்து போர்ச்சுகீசியர் தப்பமுடியாது. வரலாறு இதனை நன்கு பொறித்திருக்கிறது.

போர்ச்சுகலுக்கும், பிற வெள்ளை இனத்தவருக்கும், குறிப்பாக ஆங்கிலருக்கும் ஏற்பட்ட போர்களின் காரணத்தால் போர்ச்சுகலின் பேராசைத்திட்டம் தகர்ந்து போயிற்று. மிகவேகமாகப் பரவிய போர்ச்சுகீசிய ஏகாதிபத்யம் தேய்ந்து, இன்று, கோவா, டய்யூ, டாமன் என்ற மூன்று துண்டுகளை மட்டும் கவ்விக்கொண்டிருக்கிறது அந்த ஏகாதிபத்யம்! இந்த மூன்றுஇடங்களும் சேர்ந்து 1540—சதுரமைல் அளவுதான்; மக்களின் எண்ணிக்கை 580,000 என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இவை இந்திய உபகண்டத்துப் பகுதிகள். கடலோரப் பகுதிகள்; துறைமுகங்கள்; இவை, இந்தப் பரங்கியரிடம் இருக்க விடமாட்டோம் என்று வீரமுழக்கம் செய்கிறார்கள் விடுதலை விரும்பிகள். இவர்களை அடக்கத்தான் போர்க்கப்பல்களை அனுப்புகிறது போர்ச்சுகல்! எத்தனைகப்பல்களை அனுப்பும்! எத்தனை நாட்களுக்கு அனுப்பிக்கொண்டே இருக்கமுடியும்!


ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வாநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.


## வழக்கு வாபஸ்

2-ம் பக்கத் தொடர்ச்சி

மா: யார் உன்னைத் திருடச் சொன்னது?

கு: பக்தி எனும் உணர்ச்சி.

மா: திருடக்கூடச் சொல்கிறதா?

கு: கற்பூரத்தை ஏழைபக்தனை நான் திருடினேன், வழிப்பறிக் கொள்ளை நடத்தினார் திருமங்கை ஆழ்வார், பக்திக்காக.

வா: வ: இந்தக்காலத்தில் யாராவது செய்தால் 395-வது செக்ஷன்படி தண்டனை!

கு: அந்தக் காலத்து நீதிஇந்தக் காலத்துக்குச் செல்லாது என்றால் நாட்டை ஆளும் நீங்கள், அந்தக் காலத்து நீதியைப் போதிக்கும், பழய புராணங்களை மக்களுக்குப் போதிக்கக் கூடாது; போதிப்பது சட்ட விரோதம் என்று தடுத்திருக்கவேண்டும். தங்கு தடையின்றி பழய நீதிகளைப் போதிக்கும் புராணப்பிரசாரம், பாட்டாகவும் கூத்தாகவும், நாட்டிலே நடப்பதால், இதை அனுமதிக்கும் சர்க்காரும், பழயகால நீதியையே இன்றும் போற்றுகிறார்கள் என்று நான்நம்பினேன்.

மா: அது உன்னுடைய பைத்யக்காரத்தனம்,

கு: இந்த ஒரு விஷயத்துக்காகவே என்னைப் பைத்யக்காரன் என்று கூறுகிறீர். அந்தக்காலத்து வேப்பமரத்துக்கு இன்றும் தங்களுக்குள்ளதைவிட அதிகாரம். அதிகம். அன்று போலவே இன்றும் கருடனும் குரங்கும் தெய்வங்களாக உள்ளன. அப்படியிருக்கத் தாங்கள் அந்தக்காலத்து நீதி வேறு இன்றுவேறு என்றுஎப்படிச் சொல்லலாம்? அந்தக்காலத்து நீதி கூடாது என்றால், அவைகளை நம்பும்படிச்செய்யும் புராணப்பிரசங்கம் நிறுத்தப்பட வேண்டும்.

(கோர்ட்டை நோக்கி)

என்னமோ உளறுகிறேன் என்று நினைக்கிறீர்கள். போன மாதம் என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலே குடியிருந்துவந்தபத்மா ஏழுவருஷக் கடுங்காவல் தண்டனை பெற்றாள். தன் குழந்தையைக் கிணற்றிலே போட்டுக் கொன்று விடுத் தானும் விழுந்து இறக்கப் போகையில் அவள் பிடிபட்டுக் கோர்ட்டிலேநிறுத்தப்பட்டுத்தண்டனை தரப்பட்டது. பத்மா ஏழை! குழந்தையும் தானும் வாழமுடியாத அளவு வறுமை. பலதடவை அவள் நல்லதங்காள் கதையைக் கேட்டிருக்கிறாள், கூத்தாகப்பார்த்துமிருக்கிறாள். வறுமையின் கொடுமை அதிகமானதும், அப்படிப்பட்ட நல்லதங்காளே ஏழ்மை வந்தபோது ஏழுபிள்ளைகளைக் கிணற்றிலே தள்ளிவிட்டுத் தானும் விழுந்து செத்தாளே, அவள் அல்லவா பத்தினி, உத்தமி, அவளைப்போல நாமும் செய்ய வேண்டியதுதான் என்று தீர்மானித்தாள், ஏழுவருஷம் தண்டித்து விட்டார்கள். ஐயா! தான் பெற்ற குழந்தையைக் கொன்றாள் பத்மா. ஆனால் அந்தக்கொலைக்குத் தூண்டுதல் செய்தது புராணம்; சதிசெய்தும் உடந்தையாகவுமிருந்தது சமூகம். அதற்குத்தண்டனைதர, தர்மப்பிரபுக்களுக்குத் தோன்றவில்லை.

மா: சுற்றிவளைத்துப் பேசவேண்டாம். சுருக்கமாகக் கூறிமுடி.

கு: நான் கள்ளனல்ல: பக்தன்! பக்தியால் தூண்டப்பட்டவர்கள், களவுமட்டுமல்ல, எதுசெய்தாலும், மன்னிக்கப்படுவார்கள்; மன்னிப்புக்கிடைப்பது மட்டுமல்லமேன்மை அடைவார்கள்; இகத்திலே மட்டுமல்ல, பரலோகத்திலும், என்று என்னை நம்பும்படிச் செய்தப் புராணப்பிரசங்கி, சாமியாடி, அந்தப் புராணப் பிரசங்கத்தை ஏற்பாடு செய்த செட்டியார், ஆகியோர் நான் குற்றம் செய்ததற்குத்தூண்டிய குற்றத்துக்கு உள்ளாகிறார்கள், அவர்களுக்கும் எனக்கும் சேர்த்துத் தண்டனை தாருங்கள், நீதியின்படி நடக்க வேண்டுமானால். அவர்கள் குற்றமற்றவர்களானால், நானும் நிரபராதியே.

[கோர்ட் இடைவேளைக்குக் கலைகிறது.]

### கோர்ட் கட்டடத்தில், மாஜிஸ்ட்ரேட் அறை

[மா, வா. வ.]

மா: சார்! அவன் சொன்னதிலே நியாயம் இருக்கிறது. உண்மையிலேயே, பக்தியின் பெயரால் நடந்திருக்கிற அக்ரமங்கள்ஏராளம். என்ன காரணத்தாலோ அவர்களெல்லாம் பக்திமான்கள் என்று கொண்டாடப்படுகிறார்கள். அவன் சொன்னதுபோல, மாணிக்கவா... கரும் இராமதாசரும் பி... சொத்தை எடுத்துத்தமது ப... யைக்கட்டச் செலவிட்டது, ... படித் தர்மமாகும், எப்படி நி... மாகும்! இந்தக்கற்பூரம் திருடி... னுக்கு மாம்செக்ஷன்தேடுகி...

வா. வ: பழையகாலத்திலே... தியின் பெயரால் ஏதேதோ... தது. என்ன செய்வது?

மா: பழையகாலத்திலே... அந்தச்சனியன்கள் இன்று... மக்களைப்பிடித்து ஆட்... பாருங்கள் சார்! ... னே நம்வீட்டிலே... றினார்கள் என்று, ... அதைச்சொல்லும்... கம் தாங்கமுடி... செய்வது!

வா. வ: அ... பெண்கள்செ... என்ன செய்வ...

மா: அப்ப... வதற்கில்லை. எ... யுமேஉங்களுக்... அவரைப்பார்... ண்ட், பாரிஸ்... சகலரும் பு... அவர் செ... வேலையா இ... யாதுபோல... நம்ம மான... பான்.

வா. வ: என்ன செய்தார் சர். இராமராஜ்

மா: அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கிறீர் போங்கள், பழனி முருகன் கோயிலுக்குப் போய் வெள்ளிதீவட்டி பிடிக்கிறார் சார்! வெள்ளிதீவட்டி! இதுஒருபக்தியாம்!

வா. வ: சர் இராமராஜா?

மா: அவர்தான்சார்! அவ்வளவு பெரியமேதாவி, பக்தியின் பெயரால் இந்தக்காரியம்செய்தா, இவன் கற்பூரத்தைக்கொளுத்தினதிலே தவறு என்ன, பிரமாதமா இருக்கு?

வா. வ: சட்டம் இருக்கே.

மா: அது இருக்குசார்! அதைத்தான் அங்கே மேஜைமேலே மலைமலையாகக்குவித்து வைத்திருக்கிறோமே. எனக்கென்னமோ, மதத்தின்பெயராலே நாட்டிலே நடைபெறுகிறபலகாரியங்களைநினைத்தால் இவன் செய்தது குற்றம்னுகூடத் தோன்றவில்லை. பாருங்கோ, நம்ம சர். இராமராஜுக்கு ஒருசாமியார் சினேகிதம், அவர் புராணம் படிப்பவர். யாரோ ஒருநாயனாராம், கடவுளுக்கென்று அவன் வைத்திருந்த புஷ்பத்தை அவனுடைய மனைவி வாசனை பார்த்தாளாம், பார்த்ததும் ஆஹா! ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய மலரை, நீ முகர்ந்துபார்ப்பதா என்று கோபித்துக்கொண்டு, அந்தப் பெண்ணுடைய மூக்கையே அறுத்துவிட்டானாம்!

வா. வ: சுத்தமடைப்பயல்போலிருக்கே.

மா: மடத்தனம் இருக்கட்டும் சார்! எவ்வளவு போக்கிரித்தனம் பாருங்கள். நம்ம கோர்ட்டுக்கு இந்தக்கேஸ்வந்தால்...........

வா வ: 326 செக்ஷன்படி, தண்டனை நிச்சயம்!

மா: அப்படிப்பட்ட பித்தன் கதையை எங்கள் சர். ராமராஜ் எவ்வளவு கொண்டாடுகிறார் தெரியுமோ. இதற்கு ஆக்ஸ்பர்டு யூனிவர்சிடி படிப்பு என் சார்...

வா. வ: ஆ... தந்...

...னிடம் தம்பி காட்டவேண்டிய அன்புக்கு உதாரணமாகிறான்.

மா: அதைப்போலவே, இராமனை, மறைந்திருந்து அம்புபோட்டுச் செய்து வாலியைக் கொன்று அந்த அரசை அனுபவித்த சுக்ரீவனும் அந்தக்காலத்திலே இருந்தான்.

வா. வ: ஆமாம், அதுவும் உண்மைதான்.

மா: ஆகையாலே அந்தக்காலம், என்னமோ மகா பிரமாதமான புண்யகாலம், அந்தக்காலத்துஜனங்கள் மகா உத்தமர்கள் என்றுபேசுவது, அந்தப் புராணங்களின் படியே பார்த்தால்கூட அவ்வளவு உண்மையன்று தெரியவில்லை. நமக்குள்ளே பேசிக்கொள்வோம், ஏன் சார்! எப்படிப் பாண்டவர்கள் திரௌபதியைத் தங்கள் ஐவருக்கும் மனைவியாக்கிக்கொண்டு சுகித்தார்கள், அந்த அம்மைதான் எப்படி இந்தக் கோர ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டார்கள்? சேச்சே! வெளியே சொன்னாலே வெட்கக்கேடு. அவன் சொன்னதுபோல, இனிநாட்டிலே அத்தகைய பழைய குப்பைகளைப்பற்றிப்பிரசாரம்செய்வதைத் தடுக்கத்தான் வேண்டும்.

வா. வ: நாம் என்ன செய்ய முடியும்?

மா: ஏன்சார்! முடியாது. இந்த நாட்டிலே படித்தவர்கள் குறைவு, படியாதவர்கள் அதிகம். படிக்காத மக்கள் நம்மைப்போன்ற படித்தவர்களைப் பார்த்து நடப்பதுதான் நல்லது என்று எண்ணுகிறார்கள். படித்த நாமும் அந்தப் பழைய சேற்றிலே புரண்டால், படிக்காத கூட்டம், அவ்வளவு படித்தவரேபுரளுகிறாரே என்று கும்பலாகக் குட்டையிலே விழுகின்றன. இந்த மக்களைத் திருத்தவேண்டுமானால், முதலிலே நாம் திருந்தவேண்டும் சார்.

வா. வ: ஆமாம்.

மா: உதாரணமாகவினை ஜாதிமதச் சின்னத்தைக் காட்டுகிற விபூதி உமக்கும் தேவையில்லை, எனக்கும் இந்த நாமம் தேவையில்லை பாருங்க!

(இருவரும் ...

# ★ வாய்ப்பூட்டு ★

"ஜாதி இந்துக்களின்பிணத்தைக் கொளுத்துவதற்கு என்றுதனியாக உள்ள இடத்திலே, ஆதித்திராவிடரின் பிணத்தை எரித்ததற்காக, மதுரையில் இரு ஆதித்திராவிடர்கள் தண்டிக்கப்பட்டது உண்மையா?"

"ஆமாம் இரு ஆதித் திராவிடர்களுக்குத் தண்டனைதரப்பட்டது."

"அவர்கள் பிறகு, மந்திரிசபையினரால் விடுவிக்கப்பட்டனரா."

"ஆமாம்"

"அப்படித் தண்டிக்கப்பட்டது தவறு என்பதற்காவா, அவர்களை மந்திரி சபை விடுதலை செய்தது?"

"அவர்களுக்கு அளிக்கப்பட்டது, கடுமையான தண்டனை என்பதற்காக, விடுதலை செய்யப்பட்டனர்"

மதுரையில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி, சட்டசபை அங்கத்தினர், கேட்ட கேள்விக்குச்சட்டமந்திரியார்தந்தபதில், இது. சட்டசபைத்தலைவர் தோழர் சிவசண்முகம்,மந்திரிகூர்மைய்யா, மந்திரிக்குக்காரியதரிசியாக உள்ள இளைஞர் பரமேஸ்வரன், ஆகிய அன்பர்களின் முகம், இந்தப் பதிலைக் கேட்டபிறகு எப்படி இருந்திருக்கும் என்பது நமக்குத் தெரியாது: ஆனல் சட்ட மந்திரியாரின் பதிலைப் படித்ததும் நமது கண்களிலே நீர் கசிகிறது. ஆதித்திராவிடர்கள், 'அரிஜனங்கள்' காந்தியாரின் கருணைவிலாசத்துக்குப் பாத்திரமாயினர் இதனினும் பெரும்பேறு வேறு என்னவேண்டும் என்று, ஆனந்தக் கூத்தாடும் சகஜானந்தரின் உடன்பிறந்தோர்களுக்கு, சுடுகாட்டிலேகூட, நரியும் பிறவும், கழுகும் காகமும் வட்டமிட்டுவரும் பிணபுரியிலுங் கூட, சமஉரிமை ...

... பட்டு, இரக்ககுணம் காட்டாமற் போனுல், இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன் என்று பழி வருமோ என்றெண்ணி, பெருந்தன்மையைக்காட்ட, தண்டனையைக் குறைத்து, அவர்களை மந்திரியார் விடுதலை செய்தார்; அதைத் தெளிவாக்கியும் விட்டார் தமது 'பதில்' மூலம். ஆகவே இன்னமும் பிணமானுலும் சரியே, ஆதித்திராவிடருக்கு,இடம்வேறுதான்! அத்து மீறிப் பிரவேசிப்பவருக்குத் தண்டனைதான் கிடைக்கும். தண்டனை கடுமை என்று மந்திரிகளுக்குத் தோன்றினுல், அவர்களின் மனம் இளகி, தயவு பிறந்து, தண்டனை குறைக்கப்படும். சாஸ்திரமும் அதை ஒட்டிச் செய்யப்பட்ட சட்டமும், அப்படியேதான் இருக்கிறது. அதிலே மாற்றம் இல்லை! மாற்ற வேண்டுமென்ற மனப்போக்கு மந்திரிமார்களுக்குஇல்லை! அதிலேகூட ஆச்சரியம் நமக்கில்லை, மாற்றும்படி வற்புறுத்தத் தைரியம் இல்லையே, ஆதித்திராவிட அங்கத்தினர்களுக்கு. என்னே அவர் தம் நிலைமை! உரிமைப்போர் முழக்கமிடத் தெரியாவிட்டாலும்நந்தனர் கீர்த்தனை மெட்டிலாவது, "காலில் வெள்ளெலும்பு முளைத்தநாள் முதலாய் அடிமைக்காரன் ஐயே!" என்ற பஜனைமுறையிலாவதுபாடிக் கேட்கக்கூடாதா! என் தோன்றவில்லை அந்த எண்ணம்? 1946ம் ஆண்டிலே மதுரையிலே, ஜாதி இந்துவுக்கென்று உள்ள பிணஞ்சுடும் இடத்திலே, ஒரு ஆதித்திராவிடத் தோழன் தன் குழந்தையின் பிணத்தைச் சுட்ட குற்றத்துக்காகச் சிறையில் தள்ளப்பட்டான்.

அதுபோதுதான்,ஆதித்திராவிட மக்களில் ஒருவரான தோழர் சிவசண்முகம் சென்னை சட்ட சபைக்குத்தலைவராகக் கொலு வீற்றிருந்தார்.

...ய்யா எனும் மற்ருேர் ...ந்திரியாக இருந் ...

வேறே என்ன பேசினர்! ஐயோ! பாவம்!! என்பதற்காக,அந்தஆதித் திராவிடர்களை விடுதலை செய்தனராம்—அதைக்கூறினுர் மந்திரியார்! சாட்டைஅடி பலமாகி மாட்டின் முதுகிலே புண் ஏற்பட்டு, புண்ணிலே ஈமொய்த்துக்கொண்டு இருப்பதுகண்டு, வண்டிச்சக்கரத்தில் உள்ள 'மையை'எடுத்துப் புண்ணின்மேல் பூசுகிருேமல்லவா, அதுபோல சாஸ்திரம் கொடுத்த அடி, பேதமென்ற புண்ணை உண்டாக்க, அதன்மீதசட்டமும்,அதன்பேரால் தரப்படும்தண்டனைஎனும் ஈயும்உட்காரும்போது, சட்ட மந்திரியார் ஈயை ஓட்டிவிட்டு, தண்டனையைக் குறைத்து விடுதலை செய்தோம் என்ற 'மையைப்' பூசிக்காட்டினுர். இது 1946ல்! அதோ ஆப்பிரிக்காவில், ஸ்மட்ஸ்துரையின் பேதத்திட்டத்தை எதிர்த்து நமதுநண்பர்கள் போரிடும் நாட்களில்! நமக்கேஇது பற்றிவிரிவாக எழுத வெட்கமாகத்தான் இருக்கிறது, இப்படிப்பட்ட நாட்களிலே வாழ்கிருேமே என்று துக்கமாகவும் இருக்கிறது, அதேபோது, இதுபற்றிய சிந்தனையற்று ஒரு ஆதித்திராடர் சபாநாயகராகவும், மற்ருெருவர் மந்திரியாகவும் இருந்துகொண்டு, இந்த இழிவைத் துடைக்கத்தமது சிறு விரலையும் அசைக்காமலிருக்கின்றனர்! எந்த இனத்துக்குப்பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு, ஆட்சி மன்றத்திலே இவர்கள் அமர்ந்திருக்கிருர்களோ, அந்த இனம் இழிவுபடுத்தப்படுகிறது, இவர்கள் அதுகண்டு மனம் பதருமலிருக்கின்றனர். கோழியும் தன்குஞ்சுகளைக்கொல்ல வரும் பருந்துடன் போரிடும் என்ருர் பாரதிதாசன்! இதோ இவர்கள், கூடப்பிறந்தவர்கள் சமூகக்கொடுமைக்கு ஆளாகும்போது, வைதிக சட்ட திட்டத்துக்குஇறையாகும் போது, பார்த்துக்கொண்டு, வாய் திறவாது உள்ளனர்! பேசத் தெரியாததால் அல்ல!பேசச்சொல்லுங்கள், டாக்டர் அம்பேத்காரைஎதிர்த்து. சாரைத்திலிருந்துவிழும்நீரோசைபோல் இருக்கும், பேச்சு! தன் இனத்தின் தன்மானம்பறிபோகிறதே அதுபற்றிப் பேசச் சொன்னல்மட்டுமே, வாய்மூடிவிடும்! இந்த வாய்ப்பூட்டுக்குஇலாபம் கிடைக்காமல் போகவில்லை. ...தாமாதம் ஆயிரத்து ஐந்நூறு! ...சுவைக்காட்டிக்கொடுத்தஜடாசு... ...ற்றதுபோல மூன்னூறுமடங்கு ...கெம்பெற்று,மகிழ்கிருர்கள்! ஆம் ...ாசுக்குக்கிடைத்த பழிச் ...ல்போல மூன்னூறு மடங்கு ...மான பழிச் சொல்லுக்கு ...யக்குள்ளவராகிருர்கள். ... இல்லை பழிச்சொல், ஆனல், ... ஒவ்வொருமாதமும், பணம் ... போது, அவர்கள் சிந்திக்க ...ம் இந்தப்பணம் பெறுகி ...மது இனத்தின் இழிவு ...ணிலைமறந்து, என்

...ாக்
...டி.
...ாது
...யுங்கள்.
...ளி
...ரில

## ஒரு சந்தேகம்!

சென்னையில்நடைபெற்ற கம்பர் மாநாட்டுப் பிரசங்கத்தில் பண்டித சேதுப்பிள்ளை அவர்களைச் சிலர் கேள்வி கேட்டதாகவும், அதற்கு அவர், கம்பரின் கவித்திறமையைப் பாராட்டும் கூட்டத்திலே கேள்விக்குப் பதில் சொல்ல முடியாதென்றும், தனிக்கூட்டமாய் ஒன்று அமைத்துக் கேள்வி கேட்டால் பதில் சொல்லத் தயாராய் இருப்பதாகச் சொன்னுர் என்று, ஒருசெய்தியைப்பத்திரிகைகளில் படித்தேன்.

கேள்வி—பதிலுக்காகத் தனிக் கூட்டம் எப்போது கூட்டுவார்களோ, கூட்டினுலும் என்னல் போகமுடியாது; ஆகையால்,இராமாயணத்தின் முற்காலக் கேள்வி பதில்களும், இக்காலத்துக்கேள்வி பதில்களும் பெரும்பாலும் எனக்குத் தெரியுமென்ருலும், ஒருகேள்விக்குப்பதில் பண்டித சேதுப்பிள்ளை அவர்களால் தெரிந்து திருப்திஅடையலாம் என்று நினைக்கிறேன். அந்தக்கேள்வியாவது:—

இராமர் காட்டுக்குப் போவதாகத் தீர்மானமாய் விட்டது. இராமர், சீதையிடம் போய், நான்காட்டுக்குப் போகிறேன் என்ருர். நானும்கூட வருகிறேன் என்ருள் சீதை. நீவந்தால் காட்டில்பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும்; நீ அரண்மனையிலேயே இருவென்ருர் இராமர். ஒரு பெண்ணைவைத்துக் காப்பாற்றச்சக்தி இல்லாதவனென்று என் தந்தைக்குத்தெரிந்திருந்தால், என்னை உமக்குக் கலியாணம் செய்து கொடுத்திருக்கமாட்டார் என்ருள் சீதை. அதைக் கேட்ட இராமர், என்கூடக் காட்டுக்குவா; ஆனல் நான்சொல்வதை நீகேட்டு அதன்படி செய்துவிட்டு வரவேண்டும் என்ருர். அதாவது:— உன் ஆபரணங்களையும், உன்னிடமுள்ள பிறபொருள்களையும் பிராமணர்களுக்குக் கொடுத்து விட வேண்டும். உன்வேலைக்காரர்களுக்கு நீஏதாவதுகொடுக்க வேண்டுமானல், பிராமணர்களைக் கேட்டுக் கொடுஎன்பதாகும்இதில்தான்என் சந்தேகமும் கேள்வியும். நகைகளையும்பொருள்களையும் பிராமணர்களுக்குக்கொடுக்கவேண்டுமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஏனெனில் உலகிற் கெல்லாம் பொதுவாய் விளங்கும் எம்பெருமான் நம்மை எல்லாம் கடாட்சிக்கவும் நல்வழிப்படுத்தவும் மோட்சம் கொடுக்கவும் எல்லாவற்றையும் பிராமணர்களுக்குக் கொடுத்து விடுங்கள் என்று சொல்லவே சங்கும் சக்கரமும் துறந்து வைகுண்டத்தை விட்டு அயோத்திக்கு வந்தார். இப்படிப் படித்தும் பண்டிதர்கள் சொல்லவும் கேட்டிருக்கிறேன். அந்த ரகசியத்தை நமது முன்னோர்கள் அறிவித்திருக்கிருர்கள். அதிலிருந்து ஒரு புது இந்தியாவைச் சிருஷ்டிக்கப்போகிறேன் என்று நமதுகல்வி மந்திரியும் சொல்லுகிருர். அதை எப்படிச் சிருஷ்டிப்பாரோ? எந்த மந்திரிச் சிருஷ்டிப்பாரோ? சூத்திரன் மந்திரியாக இருக்கும் நாட்டில் பிராமணன் குடி இருக்கக்கூடாதுஎன்பதும்கல்விமந்திரிசொல்லும் அந்த ரகசியத்திலேயே இருக்கிறது. ஆனல் கல்விமந்திரியாருக்கு இந்த விஷயம் தெரியுமோ தெரியாதோ!

இதிருக்கட்டும் பண்டிதரிடம் கேள்விக்குப்பதில் தெரிந்துகொள்வோம். வேலைக்காரர்களுக்கு ஏதாவது தானமோ வெகுமதியோ கொடுக்க நினைத்தால் பிராமணர்

(5-ம் பக்கம் பார்க்க)

...s, 317-319 Hodgsonpet, Conjeeveram.

Best copy available.